தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

# திணை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

**திருவள்ளுவர் ஆண்டு 2053, தை**
**ஜனவரி 2022 - செய்தி மடல் 20**

பொறுப்பாசிரியர்:
**குமரன் சுப்ரமணியன் (ஜெர்மனி)**

Websites : https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

Google Groups : Mintamil Google Group

Facebook :
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar
**மின்தமிழ்**-minTamil

Youtube:
https://www.youtube.com/thfichannel

Instagram:
https://instagram.com/TamilHeritageFoundation

Twitter:
https://twitter.com/HeritageTamil

E-mail: mythforg@gmail.com

THFi - HQ : Germany
Branches : India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

Thinai Monthly Newsletter:
https://thf-news.tamilheritage.org/category/thinai

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

*(அதிகாரம்: கேள்வி - குறள் 412)*



அனைவரையும் தமிழ் மரபு அறக்கட்டளையின் 'திணை' மாதாந்திர செய்தி மடலின் வழியாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

2022ஆம் ஆண்டு பிறந்து விட்டது. புதிய செயல்திட்டங்கள், புதிய வெளியீடுகள் என்ற வகையில் புத்துணர்ச்சியுடன் தமிழ் மரபு அறக்கட்டளையின் பணிகளும் தொடர்கின்றன.

ஆண்டின் முதல்நாளில் தமிழ் மரபு அறக்கட்டளையின் செயற்குழுவினர் வழங்கிய பாடல், கவிதை, கதைகள், நகைச்சுவை, சிற்றுரை என சுவாரசியமாக உலகத்தமிழர்கள் ஒன்றிணைந்து கொண்டாடும் வகையில் ஆண்டின் முதல் நிகழ்ச்சி அமைந்திருந்தது. உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் இணையத்தின் வழியாக இணைய முடியும்; அதுவும் தமிழால் இணைய முடியும் என்ற கருத்துடன் இந்த நிகழ்ச்சி உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த ஆண்டு தொடக்கம் தமிழக அரசு ஜனவரி 12ம் தேதியை "உலகத்தமிழர் நாள் விழா" என பிரகடனப்படுத்தியது.

இதனை ஒட்டி நிகழ்ந்த ஒரு நாள் உலகளாவிய கருத்தரங்கு நிகழ்வில் தமிழ் மரபு அறக்கட்டளை தனது பங்களிப்பை வழங்கியது. தலைவர் முனைவர் க. சுபாஷிணி மற்றும் நிர்வாக குழுவினர் ஐரோப்பிய, ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் சார்ந்த உறுப்பினர்கள் விரிவாக பங்குபற்றிய இந்த அயலகத் தமிழர் நாளில் பல்வேறு கருத்துக்களை முன்வைக்க இந்த நிகழ்ச்சி ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது. உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் பாலமாக இந்த நிகழ்ச்சி அமையும் வகையில் தமிழக அரசு ஏற்பாடு செய்திருந்தது. இதன்வழி உலக தமிழ்ச் சங்கங்களின் தகவல் களஞ்சியம், அயலகத்தில் வாழ்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்கான அவசரகால உதவிகள் போன்றன பற்றிய விஷயங்களில் செயல்பாடுகள் தொடரும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

தமிழ் மரபு அறக்கட்டளையின் காலாண்டிதழ் மின் தமிழ் மேடை காட்சி-28 இம்மாதத்தில் வெளிவந்தது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வரலாற்றுத் தரமிக்க ஆய்வுக் கட்டுரைகள் இந்த காலாண்டிதழில் இடம் பெறுகின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.




வாராந்திர திசைக் கூடல் நிகழ்ச்சியில் உலகளாவிய வகையில் ஆய்வாளர்கள் பங்குபெற்று சிறப்பித்தனர். வையத் தலைமை கொள் பிரிவு பெண்கள், குழந்தைகள், மாற்றுப் பாலினத்தவர் நலனை கருத்தில் கொண்டு மாதம் ஒரு நிகழ்ச்சி எனத் தகுந்த சமூக செயல்பாட்டாளர்களைக் கொண்டு ஒவ்வொரு மாதமும் ஒரு நிகழ்ச்சி எனச் செயல்படுத்தத் தொடங்கி உள்ளது. அந்த வகையில் ஜனவரி மாதம் உணவு மற்றும் உடற்பயிற்சி என்ற நோக்கத்தைக் கருத்தில் கொண்ட நிகழ்ச்சி பொதுமக்களின் நன்மைக்காக ஏற்பாடு செய்யப்பட்டு நிகழ்த்தப்பட்டது.




தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகப் பிரிவின் வெளியீட்டின் வழி மேலும் ஒரு நூல் வெளியீடு கண்டது. தமிழகத் தொல்லியல் துறை ஆய்வாளர் முனைவர் கோ.சசிகலா எழுதிய, "தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்" என்ற நூல் தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகளின் வரிசையில் இணைகிறது.




தமிழ் மரபு அறக்கட்டளை முன்னெடுக்கும் வரலாற்றுப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் இணைந்து தமிழ்ப்பணியாற்ற தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு உங்களை அன்புடன் வரவேற்கின்றது.

தமிழால் இணைவோம்!

**அன்புடன்**
**முனைவர் க. சுபாஷிணி**
(தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு)

2022 ஜனவரி - முக்கியப் பகிர்வுகள்

**ஜனவரி 12 உலகத் தமிழர் நாள் விழா - தமிழக அரசு**

இந்த ஆண்டு தொடக்கம் தமிழக அரசு ஜனவரி 12ம் தேதியை உலகத் தமிழர் நாள் விழா என பிரகடனப்படுத்தியது. இதனை ஒட்டி நிகழ்ந்த ஒரு நாள் உலகளாவிய கருத்தரங்கு நிகழ்வில் தமிழ் மரபு அறக்கட்டளை தனது பங்களிப்பை வழங்கியது.








தலைவர் முனைவர் க. சுபாஷிணி மற்றும் நிர்வாக குழுவினர் ஐரோப்பிய, ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் சார்ந்த உறுப்பினர்கள் இந்த அயலகத் தமிழர் நாளில் விரிவாக பல்வேறு கருத்துக்களை முன்வைத்து இந்த நிகழ்வில் பங்காற்றினர்.

**காணொளி :** https://youtu.be/McFlZxj51xs

**தமிழ் மரபு அறக்கட்டளையின் புதிய நூல் வெளியீடு**

தமிழ் மரபு அறக்கட்டளையின் பதிப்பகப் பிரிவின் சீரிய முயற்சியில் புதிய நூல் வெளியீடு
**"தமிழ் நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்"**

**நூலாசிரியர்:** முனைவர் கோ. சசிகலா




இந்நூல் நடக்கவிருக்கும் சென்னை புத்தகக் கண்காட்சியில் இடம்பெறும். வரலாற்று ஆர்வலர்கள் அனைவரும் இந்த நூலை வாங்கி ஆதரவு தரவேண்டுகிறோம். தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகத்தின் வரலாற்று நூல்களை வாங்கிடுவீர். தங்கள் நட்புகளுக்கும் குழந்தைகளுக்கும் வரலாற்றை அறிமுகப்படுத்துங்கள்.

நூல்களைப் பெற கீழ்க்காணும் இணைய விற்பனையாளரைத் தொடர்புகொள்க!
https://knightshopper.com/ https://www.commonfolks.in/

**மின்தமிழ்மேடை -28**

**தமிழ் மரபு அறக்கட்டளையின் காலாண்டு மின் இதழ்**

"**மின்தமிழ்மேடை**" **காட்சி**: 28 **வெளியீடு** [**ஜனவரி** – 2022].




**இதழ்:** [http://books.google.com/books/about?id=VsVZEAAAQBAJ](http://books.google.com/books/about?id=VsVZEAAAQBAJ)

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

**2021 வது ஆண்டிற்கான தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின்**

**'சிறந்த செயற்பாட்டாளர் விருது' மற்றும் 'வளரும் செயற்பாட்டாளர் விருது' அறிவிப்பு**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கி தம் செயல்பாடுகளில் தொடர்ந்து வளர்ந்து வரும் அமைப்பு. ஏராளமான தன்னார்வலர்களின் பங்களிப்பில் எண்ணற்ற செயல்பாடுகளை கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக செய்துவருகிறது. இளைஞர்கள் பலர் தொடர்ந்து எமது அமைப்பில் இணைந்து தங்களால் இயன்ற வகையில் பங்களிக்கின்றனர். அவர்களது செயல்பாடுகளை பாராட்டும் விதமாகவும் ஊக்கப்படுத்தும் விதமாகவும் 2021ம் ஆண்டின் சிறந்த செயற்பாட்டாளர்களை தமிழ் மரபு அறக்கட்டளை அமைப்பின் தலைவர் முனைவர் க.சுபாஷிணி அவர்கள் 2022 ஜனவரி 1ம் தேதி, சனிக்கிழமை, அன்று நடைபெற்ற சிறப்பு மெய்நிகர் நிகழ்வில் அறிவித்தார். செயற்பாட்டாளர்கள் தொடர்ந்து தங்களை மேம்படுத்திடவும் தொடர்ந்து தமிழ் மரபு அறக்கட்டளை அமைப்பின் செயல்பாடுகளில் பங்காற்றி பயனடைந்திடவும் அவர்களை நன்றியுடன் வாழ்த்துகிறோம். **'சிறந்த செயற்பாட்டாளர் விருது'** பெறும் நால்வருக்கும் சுபாஷிணி மற்றும் ஆனந்த் அமலதாஸ் எழுதிய 'சித்திரக்கதைகள்' 'வீரமாமுனிவர்' 'ஜெர்மன் தமிழியல்' 'மெட்ராஸ் 1726' மற்றும் 'என் வாசிப்பில் சில பக்கங்கள்' ஆகிய ஐந்து நூல்கள் பரிசாக அளிக்கப்படுகிறது. **'வளரும் செயற்பாட்டாளர் விருது'** பெறும் மூவருக்கும் 'சித்திரக்கதைகள்' 'வீரமாமுனிவர்' 'ஜெர்மன் தமிழியல்' ஆகிய மூன்று நூல்கள் பரிசாக அளிக்கப்படுகிறது.

| 'சிறந்த செயற்பாட்டாளர் விருது' பெறுவோர் | | 'வளரும் செயற்பாட்டாளர் விருது' பெறுவோர் | |
|---|---|---|---|
| **திரு. மு. விவேகானந்தன்**<br>கருத்தரங்கப் பொறுப்பாளர்<br>தமிழ் மரபு அறக்கட்டளை<br>விருதுநகர் / சென்னை |  | **திரு. அருணேஷ்**<br>சங்கம் பீடியா வலைப்பக்க பொறுப்பாளர்<br>தமிழ் மரபு அறக்கட்டளை<br>சென்னை |  |
| **திருமிகு. மலர்விழி**<br>பதிப்பகப் பிரிவு, சுவலி திட்டப் பொறுப்பாளர், தமிழ் மரபு அறக்கட்டளை |  | **செல்வி. ப்ரீத்தி**<br>அருங்காட்சியகப் பிரிவு பொறுப்பாளர்<br>தமிழ் மரபு அறக்கட்டளை<br>சென்னை |  |
| **திரு. குமரன்**<br>திணை - மின் செய்திமடல் பொறுப்பாசிரியர்<br>தமிழ் மரபு அறக்கட்டளை<br>ஜெர்மனி |  | **திருமிகு. மதிப்பிரியா**<br>மதுரைக் கிளை துணைப் பொறுப்பாளர்<br>தமிழ் மரபு அறக்கட்டளை<br>மதுரை |  |
| **திரு. மணிவண்ணன்**<br>மரபுப் பயணப் பொறுப்பாளர்<br>தமிழ் மரபு அறக்கட்டளை<br>திருப்பூர் / நாகை / தஞ்சை |  | சிறந்த செயற்பாட்டாளர் விருது' மற்றும் 'வளரும் செயற்பாட்டாளர் விருது' அறிவிக்கும் காணொளி<br>https://youtu.be/ScnOZeqI6xw?t=3156 | |

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

**தமிழ் மரபு அறக்கட்டளையின்**

**2022 ஜனவரி மாத நிகழ்வுகள்**

திசைக் கூடல் - வாராந்திர உரை நிகழ்ச்சிகள்

| தேதி | நேரம் | கிழமை | உரையாளர் | உரை தலைப்பு |
|---|---|---|---|---|
| 01/01/2022 | 5:00 PM | சனி | பல பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடல் | புத்தாண்டு சிறப்பு மெய்நிகர் நிகழ்ச்சி<br>https://youtu.be/ScnOZeql6xw |
| 08/01/2022 | 5:00 PM | சனி | முனைவர். கண்ணபிரான் இரவிசங்கர் | தமிழ் இலக்கியங்களில் புத்தாண்டும் வானியலும்<br>https://youtu.be/MQK_AGy7MEE |
| 09/01/2022 | 11:00 AM | ஞாயிறு | பேராசிரியர் மு.முத்துவேலு மற்றும் திரு.எழில்வாணன் | சித்திரக் கதைகள் (ம) வீரமாமுனிவர் – நூல்கள் திறனாய்வு<br>https://youtu.be/xEj4swPc2XU |
| 15/01/2022 | 5:00 PM | சனி | முனைவர் க.சுபாஷிணி<br>திருமிகு. தாமரை சீனிவாசராவ்<br>முனைவர். ச. மதிப்பிரியா | உலகத் தமிழர்களின் பொங்கல் விழா கொண்டாட்டங்கள்<br>https://youtu.be/FhS7NDmr4pA |
| 22/01/2022 | 5:00 PM | சனி | கிருத்திகாதரன் மற்றும் முனைவர் தா.காட்வின் | ஆரோக்கியமான உணவும் உடற்பயிற்சியும்<br>https://youtu.be/vpB3IFn-Z0E |
| 29/01/2022 | 5:00 PM | சனி | முனைவர் செ. இராஜேஸ்வரி | நாகர் வழிபாடு<br>https://youtu.be/1YQ2NgYampw |

திசைக் கூடல் - வாராந்திர உரை நிகழ்ச்சி

புத்தாண்டு சிறப்பு மெய்நிகர் நிகழ்ச்சி

திசைக் கூடல் நிகழ்வு **#255**




சிற்றுரை, சிறுகதை, இசை, நாட்டுப்புறப் பாடல், பலகுரல் நிகழ்ச்சி, வீர விளையாட்டு சிலம்பம்

இன்னும் பல ...

பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடல் புத்தாண்டுக்கொண்டாட்டம்.

**அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்!**

ஜனவரி – 1, 2022 – சனி – மாலை 05:00 இந்திய நேரம்

காணொளி : https://youtu.be/ScnOZeqI6xw

தமிழ் இலக்கியங்களில் புத்தாண்டும் வானியலும்

**முனைவர். கண்ணபிரான் இரவிசங்கர்**
முழுமைநேர முதலீட்டு வங்கியாளர்,
எழுத்தாளர் / பகுதிநேரத் தமிழ்ப் பேராசிரியர், பிரான்சு.

திசைக் கூடல் நிகழ்வு #256




ஜனவரி – 11, 2021 – சனி – காலை 11:00 இந்திய நேரம்

காணொளி : https://youtu.be/MQK_AGy7MEE

**தமிழ்ப் புத்தாண்டு தையா? சித்திரையா?**

**இதில் உள்ளது அரசியலா இல்லை அறிவியலா? தமிழ்ப் புத்தாண்டின் பெயர்கள் ஏன் தமிழில் இல்லை? தமிழ் இலக்கியத்தில் புத்தாண்டு பற்றிய தரவுகள் உள்ளனவா? தமிழ்ப் புத்தாண்டு ஒரு மதம் சார்ந்ததா?**

**மேலும் பல கேள்விகளுக்கும் விளக்கம் பெற ...காணொளி**

**கேள்வியே வேள்வி ஆகும் பொது ... சிந்தனை விருந்தாகும்!**

**சித்திரக் கதைகள் (ம) வீரமாமுனிவர் – நூல்கள் திறனாய்வு**

**பதிப்பாளர் உரை** : **திரு.ஒளிவண்ணன், எழிலினி பதிப்பகம்** (EMERALD PUBLISHERS)

**ஆய்வுரை** : **பேராசிரியர் மு.முத்துவேலு, உறுப்பினர், மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம், சென்னை**

**நூல் திறனாய்வு** : **திரு.எழில்வாணன், செயலாளர், ஜன்ஸ்டீன் கல்லூரிகள் நூலாசிரியர்**

திசைக் கூடல் நிகழ்வு **#257**




ஜனவரி – 9, 2022 – ஞாயிறு – காலை 11:00 இந்திய நேரம்

காணொளி : https://youtu.be/xEj4swPc2XU

**உலகத் தமிழர்களின் பொங்கல் விழா கொண்டாட்டங்கள்**

**மலேசியாவில் பொங்கல் விழா - முனைவர் க.சுபாஷிணி**
**கம்போடியாவில் பொங்கல் விழா - திருமிகு. தாமரை சீனிவாசராவ்**
**மதுரையில் பொங்கல் விழா - முனைவர். ச. மதிப்பிரியா**

திசைக் கூடல் நிகழ்வு **#258**




ஜனவரி – 15, 2021 – சனி – மாலை 05:00 இந்திய நேரம்

காணொளி : [https://youtu.be/FhS7NDmr4pA](https://youtu.be/FhS7NDmr4pA)

**தாய்வீடு திரும்பும் தமிழ்க் கல்வெட்டுகள்**
**இந்திய நிலப்பரப்பில் தென்பகுதியில் குறிப்பாக தமிழகத்தில்தான் அதிகப்படியான கல்வெட்டுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால் கிடைத்த அனைத்து தமிழ்க் கல்வெட்டுகளும் படியெடுக்கப்பட்டனவா? அவை அனைத்தும் முழுமையாக வாசிக்கப்பட்டு விட்டனவா? அவை விரைவில் தமிழகம் திரும்புகிறதென்றால் இதுவரை இங்கு இல்லையா?**

**மேலும் அறிய** [**...மின்தமிழ்மேடை** - 28](#)

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

**ஆரோக்கியமான உணவும் உடற்பயிற்சியும்**

**கிருத்திகாதரன்**
**நிறுவனர், ஹெப்டா சென்ஸ், பெங்களூரு, கர்நாடகா (மற்றும்)**
**முனைவர் தா.காட்வின்**
உடற்கல்வி ஆசிரியர் & யோகா பயிற்றுனர், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
அலங்காநல்லூர், மதுரை மாவட்டம், தமிழ்நாடு

திசைக் கூடல் நிகழ்வு **#259**




ஜனவரி – 22, 2021 – சனி – மாலை 05:00 இந்திய நேரம்
காணொளி : [https://youtu.be/vpB3IFn-Z0E](https://youtu.be/vpB3IFn-Z0E)

**தொ. பரமசிவனின் அழகர் கோவில்**

**கோயிலின் தோற்றம், அமைப்பு, இலக்கியங்களில் அழகர் கோயில், அழகர் கோலம், கோயிலும் சமூகத்தொடர்பும் என பல்வேறு தலைப்புகளில் அமைந்த ஆய்வு நூல் பற்றிய விரிவான நூலறிமுகக் கட்டுரை ஆசிரியர் அ. முத்து சிவகாமி.**

**மேலும் அறிய ...மின்தமிழ்மேடை - 28**

## 'ஆரோக்கியமான உணவும் உடற்பயிற்சியும்' இணையவழி கருத்தரங்கச் சுருக்கம்

ஆரோக்கிய உணவும் உடற்பயிற்சியும் என்கிற தலைப்பிலான திசைக்கூடல் நிகழ்வு நிறைவானதொரு நிகழ்வு.

உணவு பற்றிப் பேசிய கிருத்திகாதரன் சாப்பிட வேண்டியவை, வேண்டாதவை, சத்துணவுகள், அவற்றின் பட்டியல் என்பது மாதிரியான பொதுவான விஷயங்களைச் சொல்லாமல் மாறுபட்ட கோணத்தில் நாம் வாங்கிச் சாப்பிடுகின்ற உணவுப் பொட்டலங்களின் மேற்புறம் எழுதப்பட்டு இருக்கிற தரவுகளை நாம் எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும்? எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை விளக்கமாகச் சொன்னார்கள். பயனுள்ளதாக இருந்தது. இனி நாம் வாங்கும் பொருள்களை அது எந்தப் பொருளாக இருந்தாலும் கட்டாயம் ஒரு முறை நம்முடைய கண்ணானது அந்த உறையின் மேலுள்ள எழுத்துக்களை, வரிகளை வாசிக்கும், அது குறித்துச் சிந்திக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்ததாக உடற்பயிற்சி பற்றிப் பேசியதோடு அதைச் செய்வதற்குச் சொல்லிக்கொடுத்த காட்வின் மிக எளிமையாக உடற்பயிற்சிகளை நமக்குச் சொல்லிக்கொடுத்தார். அவர் சொல்லிக் கொடுத்த அனைத்து உடற்பயிற்சிகளையும் நம் வீட்டில் ஒரே நேரத்தில் செய்யாவிட்டால் கூட இரண்டு உடற்பயிற்சிகளை மட்டுமாவது நாமாகப் பயமின்றிச் செய்யலாம். செய்தது சரியா? என்கிற யோசனையும் சந்தேகமும் வருவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் இப்படி மூச்சு விடுங்க, இப்படிக் கையைத் தூக்குங்க, அப்படித்தான், அவ்வளவுதான் என்று பயமுறுத்தாமல் சொல்லித் தந்ததுடன் செய்தும் காட்டினார்.

இன்றைக்கு நம்மிடம் உடற்பயிற்சி பற்றிப் பேசும் அனைவரும் தினமும் செய்யணும் கட்டாயம் செய்யணும் இல்லாவிடில் உடம்பு கெட்டுவிடும் அல்லது குண்டாகிவிடும் என்று உடற்பயிற்சி குறித்ததொரு பயமுறுத்தல்களை முன்வைத்துத்தான் பேசுகிறார்கள். சொல்லியும் தருகிறார்கள். ஆனால் அப்படி இல்லாமல் எளிமையாக ஏழு அல்லது எட்டு உடற்பயிற்சிகளை நம்மையும் செய்ய வைத்தது இன்னும் நமக்கு மகிழ்ச்சியை, நம்பிக்கையைத் தந்தது. நாம் செய்யக்கூடிய உடற்பயிற்சிகள்தாம். இருவருக்கும் மனமார்ந்த நன்றி. ஆக இன்றைய திசைக்கூடல் இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் நமக்கு மிகவும் உபயோகமாக இருக்கக்கூடிய அதே நேரத்தில் பிறருடைய உதவியை நாடாமல் நாமே நமக்கான அனைத்தையும் செய்து கொள்ளக் கூடியதாக நம்முடைய உடலையும் மனதையும் நாமே பராமரித்துக் கொள்ளக் கூடியதாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.

முனைவர் ஆ.பாப்பா
மதுரைக் கிளை பொறுப்பாளர்
தமிழ் மரபு அறக்கட்டளை

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

**நாகர் வழிபாடு**

**முனைவர் செ. இராஜேஸ்வரி**
**மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர், பதிப்பாளர், எம்ஜிஆர் பட ஆராய்ச்சியாளர்**
**மதுரை, தமிழ்நாடு**

திசைக் கூடல் நிகழ்வு **#260**




ஜனவரி – 29, 2022 – சனி – மாலை 05:00 இந்திய நேரம்

காணொளி : [https://youtu.be/1YQ2NgYampw](https://youtu.be/1YQ2NgYampw)

**நாகர் வேளாண்குடியின் கடவுள், ஆனால் மேய்ச்சல் குடியின் எதிரி! ஏன்?**
**நகரம், நாகரிகம் சொற்களின் மூலம் நாகர் என அறிவீரா? நகரி - நாகர் இனத்தவரின் எழுத்துரு தேவநகரியாக திரிதல் அரசியல் வரலாறு! புராண கடவுளர் நாகத்தை வெல்வதும் அடக்குவதும் ஏன்? தொண்மையான வழிபாட்டுமுறை இன்று நமக்கு அவமானமா? அல்லது நமது அடையாளமா?.**

**மேலும் பல கேள்விகளுக்கும் விளக்கம் பெற** ...[**காணொளி**](https://youtu.be/1YQ2NgYampw)

தமிழ் மரபு அறக்கட்டளையின் ஆய்வுப் பயணத்தில் நீங்களும் இணையுங்கள்.

தமிழால் இணைவோம்!

---

தமிழ் மரபு அறக்கட்டளை

https://tamilheritage.org/

---

தமிழ் மரபு அறக்கட்டளையின் செய்திகள்

https://thf-news.tamilheritage.org/

---

"கடிகை" – தமிழ் மரபு முதன்மைநிலை இணையக் கல்விக் கழகம்

https://academy.tamilheritage.org/

---

சங்கம்பீடியா

https://sangathamizh.tamilheritage.org/

---

தமிழ் மரபு அறக்கட்டளையின் நிகழ்ச்சிகள் - நாட்காட்டி:

**https://tinyurl.com/THFi-Calendar**

## நல்ல சிந்தனை:

*நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்கேலா*
*வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை - நன்மொழியைச்*
*சிற்றின மல்லார்கட் சொல்லலும் இம்மூன்றும்*
*கற்றறிந்தார் பூண்ட கடன்.*

**- திரிகடுகம்**

**பொருள்: சொற்களை ஆராய்ந்து அவற்றின் பொருளை உள்ளபடி உணர்ந்து கொள்ளுதல், பயனற்ற சொற்களை கூறாமை, நல்ல நூற்கருத்துக்களை அவற்றை விரும்பிப் போற்றுவார்க்குக் கற்பிப்பதும், கல்வியின் பயனாக பல நூல்களையும் படித்தறிந்தவர் பெறுவர்.**